அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்கப்பட்டுள்ளார். அந்த விவரங்கள் கிடைத்தவுடன் இச்செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, தமிழகத்திலே நகராட்சிகளாக உயர்த்தப்படவேண்டிய அளவிற்குப் பல ஊராட்சிகள் இருக்கின்றன. அவற்றை உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : காலம் வரும்போது உயர்த்தப்படும். நகராட்சிகளை எல்லாம் உயர்த்துவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகள் அனுசரிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

விசைத்தறிகள்

*10 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விசைத்தறி வாங்க நெசவாளர்களுக்குத் தற்போது என்ன என்ன உதவிகள் எந்த நிறுவனங்கள் மூலமாகத் தரப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில்களுக்கு அரசாங்க உதவிச் சட்டம் மூலமாகவும், வாணிக வங்கிகளின் மூலமாகவும், விசைத்தறிகளை வாங்க, தனிப்பட்ட நெசவாளர்களுக்கு வழி செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு விசைத்தறிகள் வாங்குவதற்கு அரசு கடனுதவி செய்கின்றது.

கைத்தறி நெசவாளர்கள்

*11 வினா—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறி புகுத்தப்படுவதால் வேலை இழக்கும் கைத்தறித் தொழிலாளர்கள் நிவாரணத்திற்கெனத் திட்டம் ஏதும் வகுக்கும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா?

(இ) நெசவு ஆலைகள் மற்றும் நூற்பாலைகளுக்குக் கைத்தறி நெசவாளர் குடும்பத்தினருக்கு முதற் சலுகை காட்டி வேலையளிக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். விசைத்தறிகள் புகுத்தப்படுவதால் துயருறும் தொழிலாளர்களின் துயர் தணிப்புக்காகப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) கைத்தறித் துணிகளில் பலவகைகளை உருவாக்குவதில் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்களை அமைத்தல்;